பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 06 2025 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உள்நாட்டு பாதுகாப்பிலும் மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- நாட்டின் அறிவியல் - ஆராய்ச்சித்துறைகளில் இந்திய தொழில்நுட்பக்கழகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், ஐந்து நாள் பயணமாக சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்வீடன் நாடுகளுக்கு புறப்பட்டு சென்றார்.

- தேசிய ஜனநாயக கூட்டணியின் 11 ஆண்டுகால ஆட்சியில் 27 கோடி பேர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- பெல்ஜியத்திற்கு எதிரான முதலாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மூன்றாவது முறையாக ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர், உள்நாட்டு பாதுகாப்பில் மத்திய அரசு பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், வளர்ச்சி மற்றும் தற்சார்பை நோக்கி புதிய இந்தியா விரைவான முன்னேற்றத்தை கண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றத்தின் சக்தியால் வளர்ச்சியை நோக்கி நாடு பயணித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதமும், நக்சல் பிரச்சினையும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், உலக நாடுகள் மத்தியில், இந்தியா குறித்த பார்வை மேம்பட்டுள்ளதாக திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<<>>>>

இந்தியாவின் அறிவியல் மற்றும் ஆராய்ச்சித்துறைகளில் இந்திய தொழில்நுட்பக்கழகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் ஐ ஐ டி-யில் மாணவர்கள் இடையே உரையாற்றிய அவர், நாட்டின் 75 ஆண்டுகால தொழில்நுட்ப முன்னேற்றப் பயணத்தில் இந்திய தொழில்நுட்பக்கழகங்கள் பாராட்டத்தக்க வகையில் செயலாற்றி வந்திருப்பதாக கூறினார்.

பாதுகாப்புத்துறையில் ஏற்றுமதி அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர், உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியில் இளைஞர்களின் திறமை மேம்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

உலகிற்கே தலைமை வகிக்கக்கூடிய நிலையைநோக்கி, நாடு முன்னேறி வருவதாகவும், உலகளாவிய பிரச்சினைகளுக்கு இந்தியா தற்போது தீர்வுகண்டு வருவதாகவும் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.

<<<<<<>>>>

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், ஐந்து நாள் பயணமாக சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்வீடன் நாடுகளுக்கு புறப்பட்டு சென்றார்.

அவரது இந்த பயணம் அந்த நாடுகளுடன் இந்தியாவின் வர்த்தகம், முதலீடு மற்றும் நீடித்த வளர்ச்சியை கருத்தில்கொண்டதாக இருக்கும் என்றும், பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்து பயணத்தின்போது பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள், அந்நாட்டு அரசின் உயரதிகாரிகள் மற்றும் தொழில் அதிபர்களை திரு பியூஷ் கோயல் சந்தித்து பேசவுள்ளார்.

பொருளாதாரம், தொழில் மற்றும் அறிவியல் ஒத்துழைப்புக்கான இந்தியா - ஸ்வீடன் கூட்டு ஆணையத்தின் 21-ஆவது கூட்டத்திற்கு அந்நாட்டு அமைச்சருடன் இணைந்து திரு பியூஷ் கோயல் தலைமை தாங்குவார் என்றும் மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>

ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பங்கேற்க சென்றுள்ள தலைமை தேர்தல் அதிகாரி திரு கியானேஷ் குமார் அங்கு வசிக்கும் இந்தியர்களை சந்தித்து பேசினார்.

அப்போது, வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் வாக்களிக்க தேவையான நடவடிக்கைகளை இந்திய தேர்தல் ஆணையம் எடுத்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

இணையதளம் மூலமாக வாக்காளர் பதிவு நடைமுறை, தபால் வாக்குகளை மின்னணு முறையில் நிர்வகிக்கக்கூடிய நடைமுறை ஆகியவை மூலம் வெளிநாட்டு வாக்காளர்கள் பங்களிப்பை அதிகரித்திருப்பதாக திரு கியானேஷ் குமார் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

சவுதி அரேபியாவுக்கு இந்தியர்கள் பயணம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல்கள் தவறானது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

அதுபோன்ற எந்த அறிவிப்பையும் சவுதி அரேபிய அரசு வெளியிடவில்லை என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மாறாக, ஹஜ் யாத்திரை காலத்தில் அதிக நெரிசலை தவிர்ப்பதற்காக குறுகியகால விசா வழங்கும் நடவடிக்கைகளுக்கு தற்காலிக தடை விதிப்பது வழக்கமான நடைமுறை என்றும், ஹஜ் யாத்திரை முடிந்ததும் தற்காலிக தடை முடிவுக்கு வரும் என்றும் மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<<<>>>>

நாடு முழுவதும் கடந்த 11 ஆண்டுகளில், 27 கோடி பேர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று, தேசிய மின்னணு தளத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், பிரதமரின் வீடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட அரசின் திட்டங்களால் அவர்கள் பயனடைந்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>

நாடு முழுவதும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வளர்ச்சி இயக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு விவசாயிகளுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நெல்லி வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பில், அதன் தலைவர் திரு சுரேஷ் மற்றும் விஞ்ஞானிகள், ஆரணி வட்டாரத்தில் மூன்று கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தனர்.

இந்த பயிற்சி பயனுள்ளதாக இருந்தது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>

மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடை உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு பிரசாந்த் குமார் மிஸ்ரா, திரு மன்மோகன் அடங்கிய அமர்வு, எதிர்மனுதாரரான திரு பாலகிருஷ்ணன் பதிலளிக்க உத்தரவிட்டது.

தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை கட்டணம் வசூலிக்கப்பட்டபோதிலும், சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்று கூறி, உயர்நீதிமன்றம் கட்டணம் வசூலிக்க தடை விதித்திருந்தது.

<<<<<<>>>>

வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் அமெரிக்காவும் - சீனாவும் லண்டனில் இன்று முக்கிய பேச்சுவார்த்தையை தொடங்க உள்ளன.

அமெரிக்க பிரதிநிதிகள் குழு, சீன அதிகாரிகளை சந்தித்து பேசும் என அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

இருநாட்டு பேச்சுவார்த்தையை சீனாவும் உறுதி செய்துள்ளது.

கடந்த வாரம் திரு ட்ரம்ப் மற்றும் சீன அதிபர் திரு ‘Xi Jinping ’ தொலைபேசியில் நடத்திய உரையாடலைத் தொடர்ந்து தற்போது இந்த பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

<<<<<<>>>>

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரப்பிரதேசம், தில்லி, மற்றும் ராஜஸ்தானின் கிழக்குப்பகுதிகளில் வெப்ப அலைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனிடையே, பீகார், மேற்குவங்கத்தின் கங்கை கரையோரப்பகுதிகள், ஒடிஷா மற்றும் தமிழகத்தில் மிதமான வெப்பமும், லேசான மழையும் பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

தெற்கு தீபகற்ப பகுதிகளில், தென்மேற்கு பருவமழை தீவிரமடையும் என்பதால், அந்த பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும், வரும் 12 முதல் 15-ஆம் தேதிவரை கர்நாடக மாநிலத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களில் வரும் 13-ஆம் தேதிவரை சுமார் 40 கிலோமீட்டர் வேகத்தில் புழுதிக்காற்று வீசக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பெல்ஜியத்திற்கு எதிரான முதலாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

Antwert -ல் நடைபெற்ற இப்போட்டியில் கீதா யாதவ், சோனம், Lalthantluangi ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

-----------------

Skopje சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

--------------

கம்பாலாவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Janvi Asawa ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் பட்டம் வென்றார்.

<<<<<<END>>>>